## உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

### குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி விதித்தல் குறித்த அறிவிப்பு

வந்தவாசி நகராட்சி

(எண் 1320/2000/இ1, 7—2—2001)

வந்தவாசி நகராட்சிக்கு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வரப்பெற்ற குடிநீர் பற்றாக்குறையாக உள்ளதால் அரசாணை எண் 271, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 31—12—96-ன்படி குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ. 341.37 லட்சம் மதிப்பீட்டில் அரசின் கடன் பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் முடிக்கப்பட்டு நகரில் கூடுதலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு வாங்கப்பட்ட கடனை திருப்பிசெலுத்தவும் அதிகமாகிவரும் குடிநீர் விநியோக பராமரிப்புச் செலவினை ஈடுகட்டவும் குடிநீர்க் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தமது 25—9—2000, 64915/99/கு.வ.உ. என்ற எண் கொண்ட செயல் முறைகளில் ஆணை பிறப்பித்ததின் அடிப்படையில் நகர மன்றம் தமது 31—10—2000 ஆம் நாள் 977 மற்றும் 29—1—2001 ஆம் நாள் 1060 எண் கொண்ட தீர்மானங்களில் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்யவும் ஏற்கனவே வழங்கியுள்ள குடிநீர் இணைப்புகளுக்கும் புதியதாக இனிமேல் வழங்கப்படும் இணைப்புகளுக்கும் 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் கீழ்க்கண்டவாறு கட்டண உயர்வு செய்ய தீர்மானித்துள்ளது.

| வரிசை எண். | இனம் | உயர்வு செய்யப்பட வேண்டிய வைப்புத் தொகை. | உயர்வு செய்யப்பட்டுள்ள குடிநீர் கட்டணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூபாய் | ரூபாய் |
| 1 | வீட்டு உபயோக இணைப்புகள். | 4,000 | 40 (1,000 லிட்டருக்கு ரூ 4 வீதம் குறைந்த பட்சம்). |
| 2 | வணிக உபயோகம் | 10,000 | 100 (1,000 லிட்டருக்கு 10 வீதம் குறைந்த பட்சம்). |
| 3 | தொழிற்சாலை உபயோகம் | 10,000 | 100 (1,000 லிட்டருக்கு 10 வீதம் குறைந்த பட்சம்). |
| 4 | ஏற்கனவே உள்ள வீட்டு உபயோக குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மொத்தமாக. | 4,000 அல்லது 1,000 வீதம் 4 தவணைகளில். | |
| 5 | ஏற்கனவே உள்ள வணிக உபயோக குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மொத்தமாக. | 10,000 அல்லது 2,500 வீதம் 4 தவணைகளில். | |
| 6 | ஏற்கனவே உள்ள தொழிற்சாலை உபயோக இணைப்புகளுக்கு மொத்தமாக. | 10,000 அல்லது 2,500 வீதம் 4 தவணைகளில். | |

வந்தவாசி,
2001 பிப்ரவரி 7.

அ. சுந்தரம்,
நகராட்சி ஆணையர்.

### கட்டடங்கள் கட்டுதலுக்கான உரிமையாணை கட்டணங்கள் மற்றும் மனைப்பிரிவு அங்கீகார கட்டணங்கள் ஏற்கனவே உள்ளதை கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து உயர்த்தப்பட்டு உள்ளதற்கான அறிவிப்பு.

போளூர் தேர்வுநிலைப் பேரூராட்சி

(ந.க.எண் 1353/2000/அ3, 1—12—2000)

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் உள்ள கட்டடங்கள் கட்டும் விதிகளின் படியும் போளூர் தேர்வுநிலைப் பேரூராட்சி மன்றத்தின் 2000 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாளிட்ட 52 ஆம் எண்ணுள்ள தீர்மானத்தின் படியும் கட்டடங்கள் கட்டுதலுக்கான உரிமையாணை கட்டணங்கள் மற்றும் மனைப்பிரிவு